

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 271 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 29 – திங்கள்கிழமை 12 மே 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 271 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 29 - Monday 12 May 2025 - Chennai 16 Pages ₹ 5.00


### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# தமிழ்நாடு, இந்தியாவில் முதலிடம்!

## ஏற்றுமதியில் – வேலைவாய்ப்புகளில் – சமூக அளவீடுகளில் – உயர்கல்வி சேர்க்கையில் – புத்தாக்கத் தொழில்களில் தொடர்ந்து சாதனை!

**சென்னை, மே 12 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் திராவிட மாடல் அரசின் முதன்மைத் திட்டங்களால் 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.**

**ஏற்றுமதியில் தமிழ்நாடு இருமடங்கு சாதனை! மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்! வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை! சமூக அளவீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்! உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடம்! வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பு! தோல் பொருள் - ஜவுளித் தொழில் உற்பத்தியில், புத்தாக்கத் தொழில்களில் தமிழ்நாடு முதலிடம் என பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அப்பொழுது கொரோனா தொற்று தமிழ்நாட்டை ஆட்டிப்படைத்தது. உயிர்ப்பலிகள் வாங்கியது. கொரோனா தொற்று ஏற்படும்போது அச்சத்தில் ஒருவருடன் ஒருவர் சந்திப்பதைக் கூடத் தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் அச்சம் சிறிதுமின்றி, கொரோனா ஒழிப்பில் ஈடுபட்டு மக்களைப் பாதுகாத்த மகத்தான பணிகளை பத்திரிகைகள் பாராட்டின. இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகப் போற்றப்பட்டார். நான் பாராட்டப்படுவதைவிட இந்தியாவில் தமிழ்நாடுதான் முதல் மாநிலமாக முன்னேற்றம் அடைவதையே விரும்புகிறேன். அதுதான் எனக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறி அந்த இலக்கினை அடைந்திட அயராது பாடுபட்டார்.

**தொழில் ஒப்பந்தங்கள்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சிகளால், தொழிற்சாலைகள் புதிது புதிதாகத் தொடங்கப்பட, நம் நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுக்கும் சென்று செய்து கொள்ளப்பட்ட 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஈர்த்துள்ள ரூ.10,27,547 கோடி புதிய முதலீடுகள், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 32.23 இலட்சம் வேலைவாய்ப்புகள் காரணமாகத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் எனப் புகழப்படுகிறது. முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்பான நடவடிக்கைகளால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் வேறு எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியாக 9.69% வளர்ச்சி கண்டு இந்தியாவில் முதல் மாநிலம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது.



**ஏற்றுமதியில் தமிழ்நாடு இருமடங்கு சாதனை!**

திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில் 2020-2021இல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்த ஏற்றுமதி 2024-2025இல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருமடங்கு உயர்ந்து சாதனை படைத்தது.

**மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்!**

மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் மராட்டியம், உத்தரப்பிரதேசம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களைவிட அதிகமாக 14.65 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணுப் பொருள்களை ஏற்றுமதி செய்து இந்தியாவில் முதலிடம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது தமிழ்நாடு.

**வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை!**

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அரசுத் துறைகள் மூலமாகவும், தனியார் துறையிலும், வேலைவாய்ப்புகளை வழங்குவதில் திராவிட மாடல் அரசு தனிக்கவனம் செலுத்தியது. அதனால், 2020-2021இல் 2.9 கோடியாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை 2024-2025இல் 3.87 கோடியாக உயர்ந்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

**சமூக அளவீடுகளில் முன்னணி மாநிலம்!**

திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், கலைஞர் கனவு இல்லம், முதலான புரட்சிகரமான திட்டங்களால் தமிழ்நாடு அபரிமிதமான வளர்ச்சிகளைக் கண்டு இந்திய மாநிலங்களில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

**உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடம்!**

உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 26 சதவிகிதமாக இருப்பது 2023-2024ல் 51.3 சதவிகிதமாக உயர்ந்து தமிழ்நாட்டின் மகத்தான சாதனையை வெளிப்படுத்துகிறது.

**சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு!**

முதலமைச்சர் அவர்களின் சீரிய நிர்வாகத் திறன்களால் மாநிலம் எங்கும் பெரிய அளவில் சாதி மோதல்களோ, தொழிற்சாலைகளில் பிரச்சினைகளோ இல்லாமல் கடந்த நான்கு ஆண்டு காலமும் தமிழ்நாட்டில் அமைதி நிலவுவது மாநிலத்தில் நிலையான வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

2022 ஆகஸ்ட் முதல் இதுவரை காவல் நிலைய மரணங்கள் எதுவும் நிகழவில்லை என்பது பாராட்டுக்குரியது. மேலும், பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் 1,00,000 மக்கள் தொகையில் இந்தியாவில் 66.4; ஆனால் தமிழ்நாட்டில் 24 என வெகுவாகக் குறைந்து மகளிர் நலன் பாதுகாக்கப்படுகிறது.

**வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பு**

2023-2024ஆம் ஆண்டுக்கான அவ்தார் நிறுவன ஆய்வில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மிகவும் உகந்த பாது காப்பான நகரம் சென்னை எனப் பாராட்டப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு முதலிடம் !**

- பொருளாதார வளர்ச்சியில் 9.69%. இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் !
- ஏற்றுமதி தயார் நிலையில் தமிழ்நாடு முதலிடம் !
- தோல் பொருள்கள் ஏற்றுமதி மற்றும் ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் !
- புத்தாக்கத் தொழில்கள் தரவரிசைப் பட்டியலில் 2018இல் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, 2022 திராவிட மாடல் ஆட்சியில் முதலிடம் !.
- பெண் காவல் அதிகாரிகளைக் கொண்டுள்ளதில் (Women IPS) தமிழ்நாடு முதலிடம் !
- இந்திய அளவில் காலணிகள் மற்றும் தோல் பொருள்கள் தயாரிப்பில் தமிழ்நாடு 38 சதவிகிதம் முதலிடம் !
- அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம் !
- அதிக எண்ணிக்கையில் சதுப்பு நிலங்கள் (RAMSAR Sites) கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு!
- வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம் !
- இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் செயல்படும் தொழிற்சாலைகளில் தமிழ்நாடு முதலிடம்!
- இந்தியாவிலேயே அதிக தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம் !
- தொழிற்சாலைகளில் பணிபுரியும் அதிக பெண் தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம் !
- அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்.

உலகளாவிய திறன் மையங்களில் மும்பை, புனே, ஐதராபாத், பெங்களூரு முதலான நகரங்களைவிட சென்னை 24.5 சதவிகித வளர்ச்சியுடன் 94,121 திறன் மையங்கள் கொண்டு இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பி டப்பட்டுள்ளது.

---

### பயங்கரவாதிகளை அழிக்கும் நோக்கில்

## ‘ஆபரேஷன் சிந்தூர்’ மேற்கொள்ளப்பட்டது!

**இராணுவ அதிகாரிகள் தகவல்!**

புதுடெல்லி, மே.12-

இந்திய ராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக லெப்டினண்ட் ஜெனரல் ராஜீவ் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்திய ராணுவம் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் தாக்குதல் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை தாக்கி அழித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது.

இந்திய ராணுவத்தின் ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது.

இந்த நிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார். இதை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் உறுதி செய்தன.

ஆனால் நேற்று முன்தினம் இரவு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை இந்தியாவின் வான் பாதுகாப்பு அமைப்பு வெற்றிகரமாக முறியடித்தது. தொடர் தாக்குதல்களால் எல்லை பகுதிகளில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில் நேற்று ஏர் மார்ஷல் ஏ.கே.பார்தி, லெப்டினண்ட் ஜெனரல் ராஜீவ், வைஸ் அட்மிரல் பிரமோத், மேஜர் ஜெனரல் ஷர்தா ஆகியோர் இணைந்து செய்தியாளர்களை சந்தித்து பேசினர். அப்போது பேசிய லெப்டினண்ட் ஜெனரல் ராஜீவ், “பயங்கரவாதிகளை அழிக்கும் நோக்கில் ‘ஆபரேஷன் சிந்தூர்’ மேற்கொள்ளப்பட்டது. 9 பயங்கரவாத முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய ஏர் மார்ஷல் ஏ.கே.பார்தி, “பயங்கரவாத இலக்குகள் தீவிர ஆலோசனைக்குப் பிறகு அடையாளம் காட்டப்பட்டன. பயங்கரவாதிகள் மீதான தாக்குதலின்போது மிகச் சரியாக இலக்கை நோக்கி குறிவைத்தோம். வான் தாக்குதல்கள் மூலம் குறிவைக்கப்பட்ட இலக்குகளை அழித்தோம்.

முக்கிய பயங்கரவாதிகளாக இருந்த யூசுப் அசார், அப்துல் மாலிக் ஆகியோர் இந்திய ராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். சரியாக குறிவைத்து முரித்கே பயங்கரவாத பயிற்சி மையத்தில் 4 முறை தாக்குதல் நடத்தப்பட்டது.

பாகிஸ்தான் நடத்திய வான் வழி தாக்குதல்களை இந்திய வான்வெளி பாதுகாப்பு கட்டமைப்பு தடுத்தது. பயங்கரவாத முகாம்களை தவிர வேறு எந்த கட்டமைப்பையும் நாம் தாக்கவில்லை. பயங்கரவாத முகாம்களை நாம் தாக்கியதற்கு பதிலாக இந்திய மக்கள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. ஆளில்லா விமானம், டிரோன்கள் மூலம் இந்திய ராணுவ நிலைகளை தாக்க பாகிஸ்தான் முயற்சி செய்தது.

நமது விமானப்படை தயாராக இருந்ததால் டிரோன் தாக்குதலில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. தாக்குதல் நடக்கும்போதே பயணிகள் விமானங்கள் பறக்கவும் பாகிஸ்தான் அனுமதித்தது. பாகிஸ்தானில் உள்ள பஸ்ரூர் வான் பாதுகாப்பு ரேடார் இந்தியாவால் அழிக்கப்பட்டது. பாகிஸ்தானில் உள்ள பல விமானப்படை தளங்களை இந்தியா தாக்கி அழித்துள்ளது” என்று தெரிவித்தார். மேலும் இந்திய ராணுவத்தால் தாக்கி அழிக்கப்பட்ட பயங்கரவாத முகாம்களின் செயற்கைகோள் படங்களை ராணுவ அதிகாரிகள் வெளியிட்டனர்.

---

### அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும்

## அன்னையர் அனைவர்க்கும் வாழ்த்துக்கள்!

**அன்னையர் தினத்தையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!**

சென்னை, மே 12 –

‘அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும் அன்னையர் அனைவர்க்கும் அன்னையர் தின வாழ்த்துக்கள்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னையர் தினத்தையொட்டி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

அன்னையர் தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மண்ணுலகின் உயிர்களை எல்லாம் தன்னிலிருந்து ஈன்றெடுத்து, அன்பினால் அரவணைத்து, தாய்மொழியூட்டி, அறிவூட்டி, ஆளாக்கி, அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும் அன்னையர் அனைவருக்கும் அன்னையர் தின வாழ்த்துகள்!**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.